




RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் ஜனவரி 21 * 2026 * மலர் -1 * இதழ்-232* VOL-1 * ISSUE-232 விலை ரூ.3 * பக்கம் -4




சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு பிறந்தநாளையொட்டி தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவருக்குசால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

## உரையை வாசிக்காமல் புறக்கணித்த ஆளுநரின் நடவடிக்கை அரசியலமைப்பு சட்டத்தை மீறும் செயல்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!!



சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் இந்திய அரசமைப்புச் சட்டம் Article 176ன்படி தமிழ்நாடு அரசால் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்ட உரையை பேரவையில் படிக்காமல் தாமே தயாரித்த உரையை படித்ததை இப்பேரவை ஏற்கவில்லை என்ற தீர்மானத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்மொழிந்து உரையாற்றினார்.

சென்னை, ஜன.21–

சட்டசபையில் உரையை வாசிக்காமல் புறக்கணித்த ஆளுநரின் நடவடிக்கை அரசியல் அமைப்பு சட்டத்தை மீறும் செயல் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டினார். மேலும் சட்டசபையில் ஆளுநர் உரையாற்றும் நடைமுறையை மாற்ற முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக சட்டசபைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் கவர்னர் உரையுடன் அவை கூடுவது வழக்கம். சட்டசபையில் பேசத் தொடங்கிய கவர்னர் ஆர்.என். ரவி, தமிழ்த்தாய் வாழ்த்தை தொடர்ந்து தேசிய கீதம் பாடப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி, தனது உரையை புறக்கணித்து வெளியேறினார். தொடர்ந்து, 4–ஆவது ஆண்டாக அவர் வெளியேறியுள்ளார்.

கவர்னர் வெளியேறிய நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவையில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

ஆளுநரின் செயல் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. ஆளுநர் வேண்டுமென்றே அரசமைப்பு சட்டத்தை மீறிய செயலை செய்துள்ளார். ஆளுநரின் செயல் என்பது நூற்றாண்டு மரபையும், நீண்ட பாரம்பரியத்தையும் கொண்ட இந்த மக்கள்சபையை அவமதிக்கும் செயலாகும். ஆளுநர் என்பவர் மாநில நலனில் அக்கறை கொண்டவராக இருக்க வேண்டும். ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை என அண்ணா கூறியிருந்தார். ஆளுநர் ஏற்கனவே நடந்து கொண்டது போலவே மீண்டும் நடந்து கொண்டது வருத்தத்துக்குரியது. பொது மேடையில் அவதூறு பேசி வருகிறார் ஆளுநர். சட்டப்பேரவை மாண்பை பாதுகாக்க வேண்டியமுதல்பொறுப்பு எனக்கு உள்ளது.

உரையை ஆளுநர் படிக்காமல் வெளியேறியதை இப்பேரவை ஏற்கவில்லை. உரையை ஆளுநர்படித்ததாக இப்பேரவை கருதுகிறது. உரையை ஆளுநர் படித்ததாக பேரவையில் ஒருமனதாகதீர்மானம் நிறைவேற்றம் செய்யப்படுகிறது. ஆளுநர் உரை மட்டும் அவைக்குறிப்பில் இடம்பெறும்; வெளிநடப்பு இடம்பெறாது. ஆளுநர் உரையை படிக்காதது ஒரு நாள் செய்தியாக இதை கடந்துவிட முடியாது. ஆண்டு தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையில் திருத்தம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும். ஆளுநர் உரையை விலக்கும் நடைமுறையை கொண்டு வர அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இந்தியா முழுவதும் இந்த நடைமுறையை அமலுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.



சட்டசபையில் இருந்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்த காட்சி.

## திருப்பத்தூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராக விஜய் இளஞ்செழியன் நியமனம்!



வாணியம்பாடி, ஜன.21

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி. தெலுங்கானா மாநிலம் அச்சம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வம்சி கிருஷ்ணா திருப்பத்தூர்மாவட்டத்தில் ஒருவாரம் சுற்றுப்பயணம் செய்து தொண்டர்கள், நிர்வாகிகள்,ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரை கலந்து ஆலோசனை செய்து மேலிட பொறுப்பாளர்கள் கிரிஷ் சோடங்கர், இந்திய தேசிய காங்கிரஸ் பொது செயலாளர் கே.சி.வேணுகோபால் ஆகியோரிடம் புதிய மாவட்ட தலைவராக விஜய் இளஞ்செழியனை நியமனம் செய்யலாம் என்று ஆலோசனை வழங்கி உள்ளார்.

இதன்அடிப்படையில் விஜய் இளஞ்செழியனை திருப்பத்தூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராக அகில இந்திய காங்கிரஸ் தலைமை நியமனம் செய்துள்ளது

. விஜய் இளஞ்செழியன் ஏற்கனவே தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவராகவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின்உறுப்பினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பொது செயலாளராகவும் பதவி வகித்து வந்தார்.இவருடைய தந்தை மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயமோகன் 3 முறை வேலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி திருப்பத்தூர் மாவட்ட தலைவராக நியமித்துள்ள விஜய் இளஞ்செழியன் நேற்று வாணியம்பாடிக்கு வருகை தந்து கட்சி நிர்வாகிகள் மற்றும் தொடர்களை சங்கீதா பின்னர் காமராஜர்,இந்திரா காந்தி, அம்பேத்கர் ஆகியோர் திரு உருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



இதனை தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும் உள்ள அக்கட்சியின் நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியியின் போது மாவட்ட பொருளாளர் கொத்தூர் பி.மகேஷ் , மனித உரிமைதுறை மாவட்ட தலைவர் ஜீலானி ,மாநில பொதுக்குழு உறுப்பினர்கிஷோர் பிரசாத் மற்றும் நகர,ஒன்றிய ,பேரூர் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### மதுரை எல்.ஐ.சி. பெண் உயர் அதிகாரி இறந்த வழக்கில் திடீர் திருப்பம்:

## பெட்ரோல் ஊற்றி எரித்துக்கொன்ற உதவி மேலாளர் கைது!

### விபத்து பாலிசி முறைகேட்டை கண்டித்ததால் கொடூரம்!!

மதுரை,ஜன.21–

மதுரை ரெயில் நிலையம்எதிரேஉள்ளஎல்.ஐ.சி. கிளை அலுவலகத்தில் முது நிலை மேலாளராக பணியாற்றி வந்தவர் கல்யாணி (54). இவர் கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் தேதி இரவு உடல் கருகிய நிலையில் தனது அலுவலகத்தில் பிணமாக கிடந்தார். இது குறித்து திலகர் திடல் போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது அவர் அலுவலகம் தீ பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

இந்த தகவல் அறிந்த திடீர் நகர் தீயணைப்பு நிலையத்தினர் அங்கு வந்து தீயை அணைத்தனர். பிறகு போலீசார் கல்யாணியின் உடலை கைப்பற்றி பிரேத சோதனைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தீ விபத்து ஏற்பட்டு அதிகாரி கல்யாணி இறந்திருக்கலாம் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் கல்யாணி எரித்து கொலை செய்யப்பட்டுள்ளார்என்றுவிசாரணையில் தெரியவந்தால் இந்த வழக்கில் திடீர் திருப்பம் ஏற்பட்டது.

அதிகாரி கல்யாணிமீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொல்லப்பட்டது தற்போது தெரிய வந்தது. போலீசார் நடத்திய விசாரணையில் இந்த அதிர்ச்சி தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த அலுவலகத்தில் பணிபுரியும் உதவி நிர்வாக அதிகாரி ராம் என்பவர் கல்யாணியை எரித்து கொலை செய்துள்ளார். அவரை போலீசார் நேற்று இரவு கைது செய்து விசாரணை நடத்தினார்கள். அப்போது திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

தேனி மாவட்டத்தை சேர்ந்தவர் ராம் என்ற ராமகிருஷ்ணன் (40).பார்வை குறைபாடு கொண்டவர். இவரது தந்தை காவல்துறையில் அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் .கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு மத்திய அரசு பணிக்காக தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.



எரித்துக்கொல்லப்பட்ட முதுநிலை மேலாளர் கல்யாணி.

அவருக்கு எல்.ஐ.சி. துறையில் வேலை கிடைத்தது. அதன் அடிப்படையில் மதுரை மேலப்பெருமாள் மேஸ்திரி வீதியில் உள்ள எல்.ஐ.சி கிளை அலுவலகத்தில் உதவி நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

பார்வை குறைபாடு உள்ளமுன்னுரிமைஅடிப்படையில் அவருக்கு இந்த பணி கிடைத்தது. இதனால் எந்நேரமும் அவர் கூலிங் கிளாஸ் அணிந்துவந்தார்.பார்வை குறைபாடு இருந்தாலும் பைக் ஓட்டி செல்வார். விபத்து இழப்பீடு தொடர்பாக பாலிசி வழங்கும் பணியையும்அவர்செய்து வந்தார். ஆனால் இதில் முறைகேடுகள் நடந்ததாக கூறப்படுகிறது.

இதனால் பாலிசி ஏஜெண்டுகள், வாடிக்கையாளர்களிடம் இருந்து முதுநிலை மேலாளரான கல்யாணியிடம் புகார்கள் வந்தன.

இதனால் ராமகிருஷ்ணனை, கல்யாணி கண்டித்தார். ஆனாலும் தொடர்ந்து முறைகேடுகள் நடந்ததாக புகார்கள் வந்த வண்ணம் இருந்தன. இந்த நிலையில் ராமகிருஷ்ணனை, கல்யாணி அழைத்து தொடர்ந்து புகார்கள் வருகிறது. இது சம்பந்தமாக உயர் அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்து உங்கள் மீது நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ராமகிருஷ்ணன் கல்யாணியை கொலை செய்ய திட்டமிட்டார்.

அதன்படிகடந்த17ஆம் தேதி மாலை ஊழியர்கள் அனைவரும் வீட்டுக்கு சென்று விட்டனர். முதுநிலை மேலாளர் கல்யாணியும், நிர்வாகி உதவி அதிகாரி ராமகிருஷ்ணன் மட்டும் அலுவலகத்தில் இருந்தனர்.

அப்போது இரவு 8.30 மணி அளவில் தான் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த வைத்திருந்த பெட்ரோலை எடுத்து ராமகிருஷ்ணன் கல்யாணி மீது ஊற்றி தீ வைத்தார். இதில் கல்யாணி உடலில் தீ பற்றியது. ராமகிருஷ்ணன் மீதும் தீக்காயம் ஏற்பட்டது.

பிறகு ராமகிருஷ்ணன்



கைது செய்யப்பட்ட உதவி நிர்வாக அதிகாரி ராமகிருஷ்ணன்.

அலுவலக கதவை பூட்டிவிட்டு கல்யாணி தப்பிச் சென்றுவிடாமல்இருக்க சங்கிலியால் பிணைத்து கதவைபூட்டிவிட்டுதப்பி சென்று விட்டார். உயிருக்கு ஆபத்தான நிலையில் கல்யாணி தனது மகன் லட்சுமி நாராயணனுக்கு போன் செய்துவிட்டு "போலீசை கூப்பிடுங்கள், போலீசை கூப்பிடுங்கள்" என்று கூறியுள்ளார். இதைத்தொடர்ந்து மகன் மற்றும் உறவினர்கள் எல்.ஐ.சி. அலுவலகத்திற்கு வந்து பார்த்தபோது தாய் கல்யாணி இறந்துவிட்டார் .

இது சம்பந்தமாக தனது தாயின் சாவில் மர்மம் இருப்பதாக திலகாதிடல் போலீசில் லெட்சுமி நாராயணன் அன்றைய தினமே புகார் கொடுத்திருந்தார். அந்த மனுவில் நெல்லையில் கிளை மேலாளராக பணியாற்றி வந்த எனது தாயார் கடந்த மே மாதம் பதவி உயர்வு பெற்று மதுரையில் உள்ள எல்.ஐ.சி. அலுவலகத்தில் பணி செய்து வந்தார், தீ விபத்து நடந்த சமயத்தில் எனக்கு போன் செய்தார்.

அப்போது போலீசை கூப்பிடு என்று மட்டும் கூறினார். அவர் பணியில் இருந்த போது ஏற்பட்ட இந்த மரணம் விபத்தால் நிகழ்ந்தது அல்ல. அவர் பணியாற்றும் போது அலுவலக கதவுகளை பூட்ட மாட்டார் கதவு திறந்தே இருக்கும் .ஆனால் தீ விபத்து நடந்த போது அலுவலகத்தின் கதவு இரும்புச் சங்கிலியால் பூட்டப்பட்டு இருந்தது. எனது தாயாருக்கு ஏற்பட்டமரணம்திட்டமிட்ட சதி என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. மேலும் சம்பவம் நடந்த இடத்தில் கூர்மையான ஆயுதங்கள் கிடந்ததாகவும்கூறப்படுகிறது. மகன் லட்சுமி நாராயணன் கொடுத்த புகார் அடிப்படையில் உதவி நிர்வாக அதிகாரியான ராமகிருஷ்ணனை தற்போது போலீசார் கைது செய்தனர்.

எரித்துக்கொல்லப்பட்ட கல்யாணியின் சொந்த ஊர் நெல்லை. இவரது கணவர் அழகிய நம்பி மதுரை வானொலி நிலையத்தில் ணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார். குடும்பத்துடன் இவர்கள் மதுரையில் வசித்து வந்தனர்.



# பழவூர் நூலகத்தில் முப்பெரும் விழா மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கி பாராட்டு!

நெல்லை, ஜன.21

நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பழவூர் கிளை நூலகத்தில் பொங்கல் திருநாள், திருவள்ளுவர்தினம், குடியரசுதினம் ஆகிய முப்பெரும்விழா அறம் வாசகர் வட்ட தலைவர் மாதவதாஸ் தலைமையில், ஆலோசகர்கள் சிவதாணு,வேல்முருகன் முன்னிலையில் நடந்தது.பள்ளி மாணவ மாணவிகள் இறைவணக்கம் பாடினார்கள். அறம் வாசகர்வட்ட செயற்குழு உறுப்பினர் தீபா வரவேற்றார்.

அறம் வாசகர்வட்ட கௌரவ ஆலோசகரும், நாறும்பூநாத சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் பழவூர் இசக்கியப்பன் அய்யன் திருவள்ளுவர் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ,மாணவிகளுக்கு பரிசு வழங்கினார்.விழாவில் ரூபாய் 1000 வழங்கி சாமிதாஸ் நூலக புரவலராக இணைந்தார். அறம் வாசகர் வட்ட துணைத்தலைவர் சண்முகசுந்தரி பொருளாளர் கனி செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் நூலக வாசகர்கள் ஆறுமுகநயினார், ஜெயந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் நூலக உறுப்பினர்கள், புரவலர்கள்,கொடையாளர்கள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் நூலக வாசகர்கள் கலந்து கொண்டனர்.நல்நூலகர் திருக்குமரன் நன்றி கூறினார்.



# வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக கணவன் மீது மனைவி புகார்!

சேலம், ஜன.21

சேலம் மாவட்டம் பூலாம்பட்டி சேர்ந்த தம்பதியர்களான கார்த்திகா பிரவீன், இவர்களுக்கு திருமணமாகி ஓராண்டு நிறைவு பெற்ற நிலையில், கார்த்திகா தற்போது நிறைமாத கர்ப்பிணியாக உள்ளார். இந்நிலையில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு தனது பெற்றோருடன் வந்திருந்த கார்த்திகா, தனக்கு திருமணம் நடைபெற்றபோது வரதட்சணை வேண்டாம் என்று கூறி திருமணம் செய்து கொண்ட தனது கணவர் வீட்டார்.

தற்போது அவர்கள் வாங்கிய 20 லட்சம் ரூபாய்க்கு கடனுக்காக, தன்னை 20 லட்சம் ரூபாய் வரதட்சணை தர வேண்டும் என்று கூறி, கடந்த ஆறு மாதமாக தனக்கு வரதட்சணை கொடுமை செய்து, தினமும் அடித்து துன்புறுத்தி, தற்போது தன்னை வீட்டை விட்டு வெளியேற்றியதால், யாருடைய ஆதரவும் இல்லாமல் நிற்கதியாக இருப்பதாகவும், தற்போது நிறைமாத கர்ப்பிணியாக உள்ள தனக்கும், தன் குழந்தையினுடைய எதிர்காலத்திற்கும் பாதுகாப்பு வழங்கிடவும், தன்னை வரதட்சணை கொடுமை செய்த கணவர் விட்டார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி, மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்க வந்துள்ளதாக கார்த்திகா கண்ணீருடன் தெரிவித்தது காண்போரை நெகிழ்ச்சி அடைய செய்தது.



# பெரியகசிநாயக்கன்பட்டி கிராமத்தில் 43ஆம் ஆண்டு மாபெரும் எருது விடும் திருவிழா!

## 300க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்பு!!

திருப்பத்தூர் ஜன.21

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அடுத்த பெரியகசிநாயக்கன்பட்டி கிராமத்தில், பொங்கல் திருநாளை முன்னிட்டு பாரம்பரியத்தை போற்றும் விதமாக 43ஆம் ஆண்டு மாபெரும் எருது விடும் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

திங்கட்கிழமையன்று காலை 10 மணியளவில் தொடங்கிய இந்த விழாவில், ஊர் பொதுமக்கள், கிராம மூத்தோர் மற்றும் இளைஞர்கள் முன்னிலையில் எருது விடும் போட்டி சிறப்பாக நடைபெற்றது.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த பாரம்பரிய விழா, கிராம மக்களின் ஒற்றுமையையும், தமிழர் வீர விளையாட்டு மரபையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது.

இந்த எருது விடும் திருவிழாவில் பங்கேற்ற காளைகள் அனைத்தும் உரிய பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ், கால்நடை மருத்துவர்கள் முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே போட்டியில் அனுமதிக்கப்பட்டன.

காளைகளின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் வீரர்களின் பாதுகாப்பு ஆகியவை முதன்மை கருத்தாக கொண்டு விழா நடத்தப்பட்டது. திருப்பத்தூர் மாவட்டம் மட்டுமின்றி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், மேலும் அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தின் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்தும் 200க்கும் மேற்பட்ட சிறந்த இனக் காளைகள் இந்த விழாவில் பங்கேற்றன. மொத்தமாக 300க்கும் மேற்பட்ட காளைகள் களமிறங்கியது குறிப்பிடத்தக்கது.

இதனை காணவும், போட்டியில் பங்கேற்கவும் 2,500க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கிராமத்தில் திரண்டதால், பெரியகசிநாயக்கன்பட்டி கிராமம் விழாக்கோலமாக காட்சியளித்தது. கிராமம் முழுவதும் பாரம்பரிய இசை, முழக்கங்கள் மற்றும் பொதுமக்களின் உற்சாக ஆரவாரம் நிறைந்திருந்தது.

இந்த எருது விடும் திருவிழாவில் வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் காளைகளுக்கு மொத்தம் 81 பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசாக ரூபாய் 77,777 வழங்கப்பட்டதுடன், பல்வேறு மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்பட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

விழா நடைபெறும் நேரம் முழுவதும் பாதுகாப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. ஜோலையார்பேட்டை காவல் நிலையத்தை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு, எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் சிறப்பாக விழாவை நடத்தினர்.

## தேசிய சாலை பாதுகாப்பு மாதம்:

# விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடி அசைத்து துவக்கி வைத்தார்!



திருப்பத்தூர ஜன.21

தேசிய சாலை பாதுகாப்பு மாதம் 2026 ஐ முன்னிட்டு, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இன்று காலை 10 மணியளவில் வட்டார போக்குவரத்து துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற இப்பேரணியை, மாவட்ட ஆட்சியர்க.சிவசௌந்தரவல்லிகொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் 50க்கும் மேற்பட்ட வாகன ஓட்டிகள் கலந்து கொண்டு, சாலை பாதுகாப்பை வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தியபடி பேரணியாக சென்றனர். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணி, தூய நெஞ்சக் கல்லூரி வரை சென்றடைந்தது. மேலும் பேரணியில், வாணியம்பாடி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் வெங்கட்ராகவன், வட்டாரப் போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் முரளி, நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் முரளி, உதவி கோட்ட பொறியாளர் சம்பத்குமார், திருப்பத்தூர் உதவி கோட்ட பொறியாளர் வெங்கட்ராமன், இளநிலை பொறியாளர்கள் பாபுராஜ், முரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் சாலை ஆய்வாளர்கள், சாலை பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்று, பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடையே சாலை பாதுகாப்பு விதிகளை பின்பற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இந்த நிகழ்ச்சி மூலம் சாலை விபத்துகளை குறைத்து, பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்ய அனைவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

## வாணியம்பாடி அருகே

# பொங்கல் பண்டிகை முன்னிட்டு ஆலங்காயம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கபடி போட்டி;34 அணிகள் பங்கேற்பு!

வாணியம்பாடி, ஜன.21

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த நடுபட்டறை கிராமத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆலங்காயம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் கபடி போட்டி.நடைபெற்றது.

இதில் வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 34 அணிகள் பங்கேற்றன. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த போட்டியின் இறுதிப்போட்டி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் வி.ஜி.அன்பு தலைமை வகித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் மாவட்ட திமுக மாணவரணி அமைப்பாளர் தே. பிரபாகரன் கலந்து கொண்டு

வெற்றி பெற்ற அணியினருக்கு முதல் பரிசாக 20 ஆயிரம் ரூபாய் மற்றும் கோப்பையை வழங்கி வாழ்த்தினார்.

நிகழ்ச்சியில் ஆலங்காயம் மத்திய ஒன்றிய துணை செயலாளர் பொன்னம்பலம், ஊர் நாட்டாமை தேசிங்கு, வார்டு உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், சசி, தேங்காய் உரிப்பு சங்க நிர்வாகிகள், கிராம மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# வாணியம்பாடி அருகே ஆலங்காயம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய நிர்வாகக்குழு கூட்டம்!



வாணியம்பாடி, ஜன.21

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த மதனாஞ்சேரி கிராமத்தில் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய நிர்வாகக்குழு கூட்டம் தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது.

கூடத்திற்கு ஒன்றிய செயலாளர் வி. எஸ். ஞானவேலன் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.பெருமாள், ஒன்றிய அவைத்தலைவர் ராமநாதன், ஒன்றிய பொருளாளர் எம்.சி.தசரதன், ஒன்றிய துணை செயலாளர்கள் தோ.குமார், வெங்கடேசன், மாவட்ட பிரதிநிதி சிவகுமார் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர் சாவித்திரி மகேந்திரன், இளைஞரணி ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் ஒவ்வொரு வாக்குசாவடியிலும் 10 மகளிர் குழுக்கள் அமைத்து கழக ஆட்சியின் சாதனைகள ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு செல்ல தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்கான பட்டியலை BLA2 மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் தயார் செய்து ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலனிடம் வழங்கினர்.

கூடத்தில் ஆலங்காயம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட BLA2 நிர்வாகிகள், கொல்லகுப்பம் மூர்த்தி பள்ளிப்பட்டு செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஓட்டலில் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு!

கோவை, ஜன. 21:

கோவை சரவணம்பட்டியை சேர்ந்தவர் சந்தோஷ். இவர் நேற்று முன்தினம் இரவு தனது குடும்பத்தினர் 5 பேருடன் வ.உ.சி பூங்கா அருகே செயல்பட்டு வரும் பிரபல ஓட்டலுக்கு சென்று இரவு உணவு அருந்தியுள்ளார். இந்த நிலையில் நள்ளிரவு 2.30 மணியளவில் சாந்தோசுக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு எற்பட்டுள்ளது. அவரை தொடர்ந்து அவரது சகோதரிக்கும், மாமாவுக்கும், தாயாருக்கும் வாந்தி மற்றும் கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டுள்ளது. மிக மோசமான நிலையில் அவரது மாமாவை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளனர். 4 வயது குழந்தை எதுவும் சாப்பிடாததால் எந்த பாதிப்பும் ஏற்படாமல்தப்பியதுஎனசாப்பிட்டகுடும்பத்தினர் தெரிவித்தனர். மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஓட்டலில் சோதனை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளனர்.




# பந்தன் மியூச்சுவல் ஃபண்ட்: மதிப்புமிக்க உலோகங்களில் எளிய மற்றும் செயல்திறன் வாய்ந்த முதலீட்டுக்கு இரண்டு புதிய ETF ஃபண்ட் ஆஃப் ஃபண்ட்ஸ்!

சென்னை, ஜன.21



பந்தன் மியூச்சுவல் ஃபண்ட், தங்கம் மற்றும் வெள்ளியில் எளிய, தெளிவான மற்றும் குறைந்த செலவிலான முதலீட்டு வாய்ப்பை வழங்கும் வகையில் பந்தன் கோல்ட் ETF FoF மற்றும் பந்தன் சில்வர் ETF FoF என்ற இரண்டு திறந்தமுடிவு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய நிதி திட்டங்களுக்கான (NFO) விண்ணப்பங்கள் 12 ஜனவரி 2026 முதல் 20 ஜனவரி 2026 வரை திறந்திருக்கின்றன.

பந்தன் AMC தலைமை நிர்வாக அதிகாரி திரு விஷால் கபூர், தங்கம் மற்றும் வெள்ளி முதலீட்டு பட்டியலில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும், ஆனால் அவற்றை அணுகும் முறையே முக்கியம் என்றும் தெரிவித்தார். FoF அமைப்பு மூலம் டெமாக் கணக்கு தேவையில்லாமல், ₹1,000 முதல் முதலீடு மற்றும் ₹100 SIP மூலம் ஒழுங்கான முதலீட்டை எளிதாக்குகிறது என்றார்.

பந்தன் கோல்ட் ETF FoF மற்றும் பந்தன் சில்வர் ETF FoF, ETFக்களின் நம்பகத்தன்மையையும் மியூச்சுவல் ஃபண்ட் முதலீட்டின் எளிமையையும் ஒன்றிணைக்கின்றன. முதலீட்டாளர்கள் தங்களது முதலீட்டு பட்டியலில் நிலைத்தன்மை, பன்முகப்படுத்தல் மற்றும் மதிப்புமிக்க உலோகங்களில் வளர்ந்து வரும் உலகளாவிய தேவையில் பங்கேற்பு ஆகியவற்றை பெற உதவும் வகையில் இந்த திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# கோரா by நிலேஷ் மிதேஷ் – சென்னை அண்ணா நகரில் தமிழ்நாட்டின் மூன்றாவது ஸ்டோர் திறப்பு!

சென்னை, ஜன.21



கோராbyநிலேஷ்மிதேஷ், தனது தமிழ்நாட்டின் மூன்றாவதுஸ்டோரைசென்னை அண்ணா நகர், 2nd Avenueஇல் ஜனவரி 14, 2026 இன்று திறந்துள்ளது. நுங்கம்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் ஸ்டோர்களுக்கு கிடைத்த வாடிக்கையாளர் ஆதரவு தொடர்ச்சியாக இந்த விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4,200சதுரஅடியில்அமைந்துள்ள இந்த ஃபிளாக்ஷிப் ஸ்டோர், நவீன இன்டீரியர்களுடன் பிரீமியம் ஆண்கள் எத்னிக் வேர் கலெக்ஷன்கள் வழங்குகிறது. அண்ணா நகர் ஸ்டோரில், பாரம்பரிய வேஷ்டி செட்கள், ஷெர்வானி கள், குர்தா செட்கள், திருமண மற்றும் விழாக்கால கலெக்ஷன்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ் பாரம்பரியத்தை நவீன வடிவமைப்புடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த கலெக்ஷன்கள், மணமகன்களுக்கு மேட்டுமேஜர் சேவையையும் கொண்டுள்ளது. இந்த தொடக்கம் குறித்து கோரா by நிலேஷ் மிதேஷ் நிறுவனங்களான நிலேஷ் சட்வா & மிதேஷ் சும்பட், கூறுகையில், "சென்னையிலிருந்து கிடைத்த அன்பும் ஆதரவும் உங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்துள்ளது. அண்ணா நகரில் எங்கள் மூன்றாவது ஸ்டோர் தொடங்குவது, தமிழ்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கும் ஒரு முக்கியமான படியாகும்," என்றனர்.

# கோயம்புத்தூரில் லைம்லைட் லாப்க்ரோன் டைமண்ட்ஸ் புதிய ஷோரூம் திறப்பு!

கோயம்புத்தூர், ஜன.21



இந்தியாவின் முன்னணி லாப்க்ரோன் டைமண்ட் நகை பிராண்டான லைம்லைட் லாப் க்ரோன் டைமண்ட்ஸ், கோயம்புத்தூரில் புதிய பிரத்யேக ஷோரூமைத் திறந்து தென் இந்தியாவில் தனது இருப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இந்த திறப்பின் மூலம், நாடு முழுவதும் 50க்கும் மேற்பட்ட பிரத்யேக ஷோரூம்கள் என்ற முக்கிய மைல்கல்லை நிறுவனம் எட்டியுள்ளது.

இந்த புதிய ஷோரூம், நிறுவனத்தின் இயக்குநர் கரம் சாவ்லா மற்றும் பிராந்திய பங்குதாரர் ஹர்ஷா வர்தன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. CVD தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட சாலிடேர் மோதிரங்கள், மாலைத் தொகுப்புகள், காதணிகள், வளையல்கள் உள்ளிட்ட உயர்தர வைர நகைகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து கருத்து தெரிவித்த பூஜா மாதவன், நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர், லைம்லைட் லாப் க்ரோன் டைமண்ட்ஸ், "லாப்க்ரோன் டைமண்டுகளைநம்பகமானமற்றும்எதிர்காலத்தை நோக்கிய ஆடம்பரதேர்வாகஇந்தியநுகர்வோருக்கு கொண்டு சேர்ப்பதே எங்கள் இலக்கு. தரத்தையும் வடிவமைப்பையும் மதிக்கும் கோயம்புத்தூரில் எங்கள் விரிவாக்கம், இந்தப் பிராண்டின் வளர்ச்சிக்கு முக்கியமான படியாகும்" என்றார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



## கீழ் குப்பம் கிராமத்தில் பொங்கல் விழா விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு!

கிருஷ்ணகிரி, ஜன.21

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த கீழ் குப்பம் கிராமத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை உற்சாகமாக நடத்தினர்.

இந்த விழாவில் தேமுதிக மாநில கழக மாணவரணி துணை செயலாளரும் சமூக சேவகரும், கல்வியாளருமான பேராசிரியர் மு.திருப்பதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். மாவட்ட கழக அவைத் தலைவர் முருகன் முன்னிலை வகித்து போட்டிகளை துவக்கிவைத்தார், நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மணிகண்டன் செய்திருந்தார், தேமுதிக இதில் சரவணன், சுரேஷ், ஐயப்பன், கருப்பணன், மயில் கோவிந்தராஜ், மனோஜ் உள்ளிட்ட ஊர் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் மிகச்சிறப்பாக உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். இந்த போட்டிகளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பங்கேற்கும் வகையில் கபடி, ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட பல்வேறு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும், பொதுமக்களுக்கும்பேராசிரியர்மு.திருப்பதி அவர்கள் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். இதில் இளம் சாதனையாளர் டக்ஸன் கலந்துகொண்டு பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார், அவருக்குநினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவில் ஏராளமான பொதுமக்கள் திரளாகக்கலந்துகொண்டு பொங்கல் கொண்டாட்டத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

## கலெக்டர் அலுவலகத்தில் பெண் தீக்குளிக்க முயற்சி!

ஊட்டி, ஜன.21

நீலகிரி மாவட்டம் ஊட்டி நொண்டிமேடு பகுதியை சேர்ந்தவர் காயத்ரி. இவர் கொரோனா காலகட்டத்தில் வீட்டின் அருகே வசிக்கும் சந்திரிகா என்பவரிடம் 7 பவுன் தங்க நகை கொடுத்துள்ளார். ஆனால் இதுவரை 2 பவுன் நகை மட்டுமே சந்திரிகா கொடுத்துள்ளதாக கூறப்படு கிறது. மீதி உள்ள 5 பவுன் தங்க நகைகளை மீட்டு தர வேண்டும் என பலமுறை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் மனு அளித்துள்ளார். இந்நிலையில் இது குறித்து காவல்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறி இன்று ஊட்டி யில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்டத்திற்கு வருகைதந்த காயத்ரி என்பவர் திடீரென தன் மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெயை தன் மீது ஊற்றி தற்கொலைக்கு முயற்சி செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து உடனடியாக காவல்துறையினர் அவரை மீட்டு காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





எம்.ஜி.ஆர். 109வது பிறந்தநாளை முன்னிட்டு கொளத்துபாளையம் பேரூர் அதிமுக செயலாளர் பைப் ரவி சந்திரன் தலைமையில் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜி.ஆர். பாலகுமாரன் சதுரங்கப் போட்டியை துவக்கி வைத்தார் .இதில் திருப்பூர் மண்டல போக்குவரத்து முன்னால் தலைவர் தங்கவேல், நகர கவுன்சிலர் நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முப்பெரும் விழா!

பரமத்திவேலூர், ஜன.21–

பரமத்தியில் குலாலர் சங்க 50வது பொன்விழா ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா மற்றும் சமுதாய ஆர்வலர்களுக்கு விருது வழங்கும் விழா மாலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சேலம்,நாமக்கல்மாவட்ட குலாலர் சங்க கல்வி அறக்கட்டளை தலைவர் மாணிக்கம் மற்றும் நாமக்கல் மாவட்ட குலாலர் சங்கத் தலைவர் சுப்பிரமணி ஆகியோர் தலைமை வகித்தனர்.பரமத்தி வட்டார குலாலர் சங்கத் தலைவர் தமிழரசன் வரவேற்புரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதி வேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே. எஸ்.மூர்த்தி, அப்துல் கலாம் அறிவியல் ஆலோசகர் டாக்டர். பொன்ராஜ், கலைமாமணி சிற்பி. தீனதயாளன், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிய நிர்வாகிகளை பதவி பிரமாணம் செய்து வைத்து சேலம் மாவட்ட மண் பானை குலாலர் சங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செல்வமாளிகை ராஜசேகரன் வாழ்த்துரைநிகழ்த்தினார்.

50 ஆம் ஆண்டு விழா சிறப்புரையை வட்டார போக்குவரத்து அலுவலர் சென்னை சரவணன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பரமத்தி ஒன்றிய திமுக செயலாளர்கள் தனராசு, லலித்குமார், கபிலர்மலை மத்திய ஒன்றிய செயலாளர் சரவணகுமார், பரமத்தி பேரூராட்சி தலைவர் மணி, பரமத்தி பேரூர் செயலாளர் ரமேஷ் பாபு, மற்றும் மேற்கு மாவட்ட ஓட்டுநர் அணி பழக்கடைகாமராஜ், பரமத்தி பேரூர் பொருளாளர் நாச்சிமுத்து, வார்டு கவுன்சிலர்கள் ராஜேந்திரன், ராமச்சந்திரன், கீதா முருகேசன், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் விக்னேஸ்வரன், துணை அமைப்பாளர்கள் கோபி, ரமேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் குலாலர் சங்க பொறுப்பாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முப்பெரும் விழா ஏற்பாடுகளை பரமத்தி வட்டார குலாலர் சங்க நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

### கலெக்டர் அலுவலக வளாகத்தில்

## தி.மு.க. நிர்வாகி திடீர் தர்ணா! கோவையில் பரபரப்பு!!

கோவை,ஜன21



கோவை வடக்கு கோவில் பாளையம், எஸ்.எஸ்.குளம், பகுதியை சேர்ந்த திமுக வார்டு துணை செயலாளர் ராஜேந்திரன் இவருக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தை 2005 ஆம் ஆண்டு எல்.ஜி. பாலகிருஷ்ணன் அண்ட் கோ நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியதாகவும், அவர்கள் போலி ஆவணங்களை தயாரித்து தனது நிலத்தை அபகரித்து விட்டனர். இது குறித்து பலமுறை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும், கோவில்பாளையம்காவல்நிலையத்திலும்புகாரளித்தும் எந்த பலனும் இல்லை. இது தொடர்பாக இன்று மீண்டும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு புகாரளிக்க வந்த நிலையில் திடீரெனதரையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார். இதையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவரை சமாதானம் செய்து அழைத்து சென்றனர்.

### கோவையில்

## அடையாளம் தெரியாத முதியவர் பிணம்!

கோவை, ஜன.21

கோவை ஆர்எஸ் புரம் டிவி சாமி ரோடு கிழக்கு பகுதியில் மணி என்கிற லோடிங் மணி (75) என்பவர் சாலையோரம் தங்கிருந்து சுமை தூக்கும் தொழில் செய்து வந்தார். இந்த நிலையில் கடந்த 14ம் தேதி இரவு மணி வழக்கம் போல பணிகளை முடித்து கொண்டு டிவி சாமி ரோடு கிழக்கு பகுதியில் உள்ள தனியார் வங்கி முன்பு படுத்து தூங்கினார்.

மறுநாள் காலை அவர் எழும்பாமல், அசைவின்றி கிடந்தார். இதனால் சந்தேகம் அடைந்த அங்கிருந்தவர்கள் ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்தனர். ஆம்புலன்ஸ் மருத்துவ ஊழியர்கள் வந்து அவரை பரிசோதனை செய்து பார்த்த போது அவர் இறந்து கிடந்து தெரியவந்தது. இதுகுறித்து ஆர்எஸ் புரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து மணியின் உடலை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், அவர் பெயர் மணி என்பதை தவிர வேறு எந்த தகவலும் போலீசாருக்கு கிடைக்கவில்லை. இதையடுத்து போலீசார் வழக்கு பதிவு செய்து மணி யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புதுச்சேரியில் ரூ.68.67 கோடி மதிப்பிலான பவர்கிரிட் GIS துணை மின் நிலையத் திட்டத்தை சலசார் டெக்னோ இன்ஜினியரிங் கைப்பற்றியது!

புதுச்சேரி, ஜன.21

புதுச்சேரியில் ரூ.68.67 கோடி மதிப்பிலான பவர்கிரிட் (POWERGRID) 110/22 kV கேஸ் இன்சுலேட்டர் சப்ஸ்டேஷன் (GIS) திட்டத்தை, முன்னணி EPC நிறுவனமான சலசார் டெக்னோ இன்ஜினியரிங் லிமிடெட் கைப்பற்றியுள்ளது. டிசம்பர் 2025இல் வழங்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ், புதுச்சேரி மின்சாரத் துறையின் (PED) ஆலோசனையுடன், லாஸ்பேட் பகுதியில் அதிநவீன GIS துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் துணை மின் நிலையத்தின் வடிவமைப்பு, பொறியியல் பணிகள், விநியோகம், நிறுவுதல் மற்றும் பரிசோதித்து செயல்படுத்துதல் ஆகியவை இடம்பெறுகின்றன. திட்டம் செயல்பாட்டுக்கு வந்தவுடன், மின் விநியோகத் திறன் மற்றும் கிரிட் கட்டமைப்பின் உறுதித்தன்மை மேம்பாட்டு, நகரமயமாக்கல் மற்றும் வளர்ந்து வரும் மின் தேவைகளை பூர்த்தி செய்ய உதவும். இதுகுறித்து சலசார் டெக்னோ இன்ஜினியரிங் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சாஷாங் அகர்வால் கூறுகையில், “POWERGRIDஇடமிருந்து இந்த GIS துணை மின் நிலையத் திட்டத்தை பெற்றிருப்பது, உயர் மின்னழுத்த மின் உள்கட்டமைப்பு துறையில் சலசார் தொழில்நுட்ப வலிமையையும் நம்பகத்தன்மையும் வெளிப்படுத்துகிறது. இந்தியாவின் மின்துறை மாற்றத்திற்கு தேவையான மேம்பட்ட தீர்வுகளை வழங்குவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்,” என்றார்.



கோவை நாயக்கன் பாளையம் ஊராட்சியில் பொதுமக்கள் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழா விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கூடலூர் நகராட்சித் தலைவர் அ.அறிவரசு பரிசுகள் வழங்கினார்.அருகில் விழா குழு தலைவர் பி ரவி, செயலாளர் ஆர். ராஜசேகரன் உட்பட பலர் உள்ளனர்.



வடவள்ளியில், குடியிருப்பு பகுதியில் புதியதாக சர்ச் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க கோரி வழக்கறிஞர் வெண்ணிலா தலைமையில் சின்மயா நகர் குறிஞ்சி நகர், சக்தி நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் கோவை கலெக்டரிடம் இன்று காலை மனு அளிக்க வந்தனர்.

### நோயால் பாதித்த பயணியை நடுவழியில் இறக்கிவிட்ட

## அரசு பஸ் டிரைவர்-கண்டக்டர் பணியிடை நீக்கம்!

கோவை,ஜன.21

கோவை வடவள்ளி பகுதியை சேர்ந்த 40 வயது பயணி ஒருவர் அரசு பஸ்சில் பயணம் செய்தார்.

அப்பேது அவருக்கு திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டு சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தார், இதையடுத்து கண்டக்டர் அந்த பயணியை நடுவழியில் இறக்கி சாலையோரம் படுக்க வைத்து விட்டு சென்றதாக கூறப்படு கிறது, இது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க கலெக்டர் பவன்குமார உத்தரவிட்டார்.

அதன் பேரில் அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் பயணியை நடுவழியில் இறக்கி விட்டது தொடர்பாக கண்டக்டர் சரவணன், டிரைவர் ஈசன் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர், பின்னர் இரண்டு பேரையும் பணியிடை நீக்கம் செய்து நடவடிக்கை எடுத்தனர்.



காலிங்கராயன் தினத்தை ஒட்டி காலிங்கராயன் பாளையம் அணைக்கட்டுவளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு தேமுதிகவினர் மாவட்ட செயலாளர் ஆனந்த் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபோது எடுத்த படம். அருகில் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்

### மருத்துவ பரிசோதனைக்கு சென்று வீடு திரும்பிய

## 3 மாத கர்ப்பிணி கார் மோதி பரிதாப பலி; கணவர் படுகாயம்!

அணைக்கட்டு,ஜன.21

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா அடுத்த கன்னிகாபுரம் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்தவர் மணி இவரது மகன்தினகரன்வயது 29, இவர் கார்பெண்டர் வேலை செய்து வந்துள்ளார்.



இவருக்கு வாணியம்பாடி பகுதியைச் சேர்ந்த தீபிகாவை வயது 22, கடந்த 6 மாதத்திற்கு முன்பு திருமணம் நடந்துள்ளது. தற்போது தீபிகா 3 மாதம் கர்ப்பமாக இருந்துள்ளார். இதனால் தினகரன் தனது மனைவியை மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதற்காக நேற்று அவருடைய பைக்கில் தீபிகாவை வேலூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதனை முடித்துவிட்டு மீண்டும் வீடு திரும்பியுள்ளார். அப்போது பள்ளிகொண்டா அடுத்த கிங்கினி அம்மன் கோயில் அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் வந்த போது வேலூரில் இருந்து பெங்களூரை நோக்கி அதிவேகமாக வந்த கார் இவர்களின் பைக் மீது மோதியுள்ளது. இதில் தீபிகா தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அதேபோல் பைக்கை ஓட்டிச் சென்ற தினகரன் படுகாயங்களுடன் மயங்கி நிலையில் இருந்துள்ளார். உடனடியாக அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து தினகரனை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அணைக்கட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டுமேல்சிகிச்சைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் தகவல் அறிந்த பள்ளிகொண்டா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கார் மோதி பலியான 3 மாத கர்ப்பிணி தீபிகாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து பள்ளிகொண்டா போலீசார் வழக்கு பதிவு செய்து கார் டிரைவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். திருமணமாகி 6 மாதமே ஆன 3 மாத கர்ப்பிணி கார் மோதி பரிதாபமாக பலியான சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது .



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு எண்.66க்குட்பட்ட புலியகுளம், லட்சுமி மில் காலனி பகுதியில் 24 மணி நேர குடிநீர் திட்டப்பணிகள் குறித்தும், 20.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டப்பட்டு வருவது குறித்தும் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகர தலைமை பொறியாளர் விஜயகுமார், உதவி ஆணையாளர் நித்யா, செயற்பொறியாளர் கருப்பசாமி, உதவி செயற்பொறியாளர் குமரேசன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

## சேலம் கம்பன் கழகம் சார்பில் கம்பன் கழக விழா!



சேலம்,ஜன.21

சேலம் கம்பன் கழகம் சார்பில், கம்பன் கழக விழா, வரும் 24ஆம் தேதி சனிக்கிழமை மற்றும் 25ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும், சேலம் பேலஸ் தியேட்டர் எதிரே உள்ள, ஏவிஆர் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. விழாவிற்கான அறிமுக நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி குறித்து, சேலம் கம்பன் கழகத் தலைவர் ஏபி. சுதர்சனம் கூறுகையில், வருகின்ற 24 மற்றும் 25ஆம் தேதிகளில் நடைபெற உள்ள கம்பன் விழாவில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான பேச்ச, கவிதை, கட்டுரை, உள்ளிட்ட போட்டிகள் நடைபெறும் என்றும், விழாவில் தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டு, எழிலுரை, சிறப்பு பட்டிமன்றம், துவக்க உரை, பரிசளித்தல், தலைமை உரை, உள்ளிட்டவைகள் குறித்து பேச உள்ளதாகவும், அடுத்த தலைமுறைக்கு கம்பனை பற்றி எடுத்துச் சொல்லும் விதத்தில் இந்த கம்பன் கழக விழா நடைபெற உள்ளது என்றும், விழா பேருரையாக சிந்தனை செம்மல் பழ. கருப்பையா தலைமையில் பேருரையும், இந்த விழாவில் அனைத்து தரப்பு மக்களும் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கு பெற்று கம்பன் கழக விழாவிற்கும் சேலத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என, ஏபி. சுதர்சனம் தெரிவித்தார்.

அறிமுக நிகழ்ச்சியில் சேலம் கம்பன் காலாக செயலாளர் சுசீந்திரகுமார், ராமன், பொருளாளர் சந்திரசேகர், செயற்குழு உறுப்பினரும், சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் கோவில் அறங்காவல் குழு தலைவருமான எஸ்டிஎன். சக்திவேல் மற்றும் சுவாமி இராமானந்த மகராஜ், ஈஸ்ட் வெஸ்ட் குழுவின் தலைவர் மோகன் குமார், சுகந்தி சுதர்சனம், திருமதி ரஞ்சனி சந்திரசேகர், உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

## சேலம் அஸ்தம்பட்டி அருகே

## எம்ஜிஆர் 109 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!



சேலம்,ஜன.21

எம்ஜிஆரின் 109 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சேலம் அஸ்தம்பட்டி அருகே உள்ள மணக்காடு பகுதியில், பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அதிமுக முன்னாள் அமைச்சர்கள் செம்மலை, வரகூர் அருணாச்சலம், ஆகியோர் எம்ஜிஆர் குறித்த பல நினைவலைகளை அக்கட்சி தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும் எடுத்துரைத்தனர். இதனைத் தொடர்ந்து பேசிய முன்னாள் அமைச்சர் சென்மலை, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த திமுக ஆட்சி விரைவில் அகற்றப்படும் என்றும், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக தனி பெரும்பான்மை பெற்று, மகத்தான வெற்றியோடு, எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அதிமுக ஆட்சி அமைவது உறுதி எனவும், தற்போது ஸ்டாலின் தலைமையான திமுக ஆட்சியில் உள்ள அனைத்து துறைகளிலும் ஊழல் மலிந்து உள்ளதாகவும், ஊழல் செய்தவர்கள் ஒருபோதும் அதிமுக ஆட்சியில் தப்ப முடியாது, உப்பு தின்றவன் தண்ணி குடித்தே ஆக வேண்டும், திமுகவின் ஆட்சிக்கணவிற்கு ஆப்பு வைக்கும் அளவில், எடப்பாடி பழனிச்சாமி ஐந்து தேர்தல் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இந்த ஐந்து அறிவிப்புகளும் எந்த கட்சியை பார்த்தும் காப்பி அடிக்க வில்லை. அதிமுக தான் மீண்டும் ஆட்சி அமைக்கப் போகிறது என்பதற்கு இந்த ஐந்து அறிவிப்புகளே போதுமானது, வரும் காலங்களில் இது போன்ற வியக்கத்தக்க பல அறிவிப்புகளை எடப்பாடி பழனிச்சாமி வெளியிட உள்ளார் என்றும், அதிமுகவின் இருவரும் தலைவர்கள் ஆன புரட்சித் தலைவர் எம்ஜிஆர், புரட்சித்தலைவி அம்மா, ஆகியோரின் ஆன்மா எடப்பாடி பழனிச்சாமிக்கு முழுவதுமாக உள்ளதால், மீண்டும் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சர் ஆவார் என அவர் உறுதிப்பட தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சேலம் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் ஏகேஎஸ் எம் பாலு, முன்னாள் எம்பி பன்னீர்செல்வம், முன்னாள் எம்எல்ஏக்கள் ரவிச்சந்திரன், செல்வராஜ், சக்திவேல், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் யாதவமூர்த்தி, அஸ்தம்பட்டி அதிமுக பகுதி செயலாளர்கள் குமார், பிரகாஷ் அப்பாதுரை, ரஞ்சித் குமார், அஸ்தம்பட்டி 13 வது கோட்டை செயலாளர் எல்பி. சீனிவாசன், ஆட்டோ குமார், தகவல் தொழில்நுட்ப இணைச் செயலாளர் ராஜேந்திரன், துணைச் செயலாளர் பாபு, மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜமுனா ராணி, மகளிர் அணி துணை தலைவி அஜித்தா, கவிதா, பாரதி, லதா, உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட, அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் என எம்ஜிஆர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## உடுமலை அருகே

## பஸ் - லாரி மோதிய விபத்தில் 13 பேர் காயம்!

உடுமலை,ஜன.21

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் மூணாறில் இருந்து அரசு பஸ் ஒன்று பயணி ஏற்றிக்கொண்டு கோவைக்கு நேற்று புறப்பட்டது. ஆனந்தகுமார் ( 47) என்பவர் ஓட்டி வந்தார் இந்த பஸ் உடுமலை மத்திய பஸ் நிலையத்திற்கு வந்தது. பின்னர் உடுமலையில் பயணிகளை இறக்கிவிட்டு உடுமலை பொள்ளாச்சி சாலையில் கோவை நோக்கி சென்று கொண்டிருந்தது.

அந்த பஸ் ராகல் பாவி பிரிவை கடந்து தனியார் கல்லூரி அருகே சென்றது அப்போது முன்னால் சென்ற லாரி ஒன்றுதிடீரெனவலதுபுறம்திரும்பியதாககூறப்படுகிறது. இதை சற்றும் எதிர்பாராத பஸ் டிரைவர் சுதாரித்து நிறுத்துவதற்குள் பஸ் லாரியின் பின்பக்கத்தில் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது. தீபத்தில் பஸ்சின் முன் பக்கம் கண்ணாடி சேதமடைந்தது. பஸ்ஸில் பயணம் செய்த 13 பயணிகள் காயமடைந்தனர் அதைத்தொடர்ந்து அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்து காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக உடுமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்த விபத்து குறித்த தகவல் உடுமலை போலீஸ் தெரிவிக்கப்பட்டது. அதன் பெயரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து போக்குவரத்து நெரிசலை சீரமைத்தனர். இதற்கிடையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சென்ற 12 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். கோவை மாவட்டம் ஒத்தக்கால் மண்டபத்தை சேர்ந்த முரளி என்பவர் மட்டும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் .



கோவை பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள ஜோதிபுரத்தில் தண்ணீர் குழாய் வெடிப்பு ஏற்பட்டு சாலையில் பெரும் பள்ளம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

## ஆசனூர் சாலையில்

## பஸ்சை வழிமறித்த யானை!

### பயணிகள் பீதி!!

சத்தியமங்கலம் ஜன. 21

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட தாளவாடி அடுத்த ஆசனூர் வனப்பகுதியில் ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. யானைகள் உணவு, தண்ணீர் தேடி வனப்பகுதியை விட்டு வெளியே வரும் போது வனப்பகுதியை ஒட்டியுள்ள சாலையில்



உலா வருவது வழக்கம். சில நேரங்களில் திடீரென அந்த வழியாக வரும் வாகனங்களை யானைகள் துரத்துகின்றன. இந்த நிலையில் நேற்று மாலை தாளவாடி அடுத்த ஆசனூர் கேர்மாளம் சாலையில் அவ்வழியாக சென்று கொண்டிருந்த பேருந்தை ஒற்றை யானை வழிமறித்து துரத்தியது. இதைக் கண்டு அச்சமடைந்த ஓட்டுநர் பயணிகளின் பாதுகாப்பு கருதி பேருந்தை பின்நோக்கி இயக்கினார். சுமார் 1 கி.மீ தூரத்துக்கு பேருந்தை துரத்திய படி சென்ற யானை பின்னர் தானாக வனப்பகுதிக்குள் சென்றது. இதனால் பேருந்தில் இருந்த பயணிகள் பீதி அடைந்தனர்.

## வாசன் கண் மருத்துவமனையில்

## 1000 ஓட்டுநர்களுக்கு "இலவச கண்புரை அறுவை சிகிச்சை, இலவச கண்பரிசோதனை!

கோவை,ஜன.21



இந்தியா முழுவதும் வாசன் கண் மருத்துவமனையில் சாலை பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு கோவை ஆர்எஸ்புரம் பகுதியில் அமைந்துள்ள வாசன் கண் மருத்துவமனை கிளையில் தலைமை மருத்துவ அதிகாரி மரு.அனுஷா வெங்கட்ராமன் செய்தியாளர்களை சந்தித்தார். இந்தியா முழுவதும் சாலை பாதுகாப்பு மாதம் ஜனவரி 11 முதல் பிப்ரவரி 11 வரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்தியா முழுவதும் மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக வணிக ஓட்டுநர்கள் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவருடைய பாதுகாப்பை கருத்தில் கொண்டு வாசன் கண் மருத்துவமனை சிறப்பான முன்னெடுப்பை எடுத்துள்ளது. சுமார் ஆயிரம் பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்படவுள்ளது. சமீபத்திய காலங்களில் 45 வயதிலிருந்தே கண் புரை ஏற்படுகிறது. எனவே கண்புரையை ஆரம்ப கட்டத்திலேயே சரி செய்ய வேண்டும் என்றார். இந்த நிகழ்வில் கண்புரை அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர். ஜெயமணிகண்டன் மற்றும் குழந்தைகளு க்கான கண் மருத்துவர். ஜனனி, வர்த்தக பொது மேலாளர் விஜயன், பொது மேலாளர் வெங்கடேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.



வி.க.நகர் மண்டலம், பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, பள்ளிச் சாலை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் 604 மாணவியருக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு , மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் க. கற்பகம், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத்தலைவர் சரிதாமகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராஜன், முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கபீர், உதவி கல்வி அலுவலர்கள் தணிகைவேலு, முனிராமையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## பெரியகுளம் அருகே

## பைக் மீது பஸ் மோதி கணவன், மனைவி பலி!

### கோவையில் இருந்து சொந்த ஊருக்கு சென்றபோது விபத்து!!

பெரியகுளம் ஜன. 21

பெரியகுளம் அருகே பைக் மீது பஸ் மோதி கணவன், மனைவி பலியானார்கள். தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள சீப்பாலயக்கோட்டையை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன்(47). இவரது மனைவி முத்துமாரி. இவர்கள் கோவையில் எலக்ட்ரிக் கடை வைத்துள்ளனர். சொந்த வேலையாக கணவன், மனைவி இருவரும் தங்களது சொந்த ஊருக்கு பைக்கில் கோவையில் இருந்து வந்தனர். இன்று காலை பெரியகுளம் தேவதானப்பட்டி அருகே உள்ள தர்மலிங்கபுரத்தில் சென்று கொண்டிருந்த போது திண்டுக்கல்லில். இருந்து தேனி நோக்கி சென்ற ஆம்னி பஸ் பைக் மீது மோதியது. இதில் உடல் நசுங்கி ராமகிருஷ்ணனும் அவரது மனைவி முத்துமாரியும் சம்பவ இடத்திலேயே



இறந்தனர். இதுகுறித்து தேவதானப்பட்டி போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் அங்கு சென்று 2 பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தேனி க. விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் கிருஷ்ணகிரி பிராதன சாலையில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் 109வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் அதிமுக நகர செயலாளர் டி.டி.குமார் தலைமையில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சரும் திருப்பத்தூர் மாவட்ட செயலாளருமான கே.சி.வீரமணி கலந்து எம்ஜிஆர் குறித்து சிறப்புரையாற்றினார். உடன் இந்த பொதுகூட்டத்தின் போது வாணியாம்பாடி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார், ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் திருப்பதி, சங்கர், செல்வம், ரமேஷ், மணிகண்டன், சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை அருகே

## அக்கச்சிப்பட்டி பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் அறிவியல் நாட்காட்டி வெளியீடு!




புதுக்கோட்டை ஜன.21

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் அறிவியல் நாட்காட்டி தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி தலைமையில் வெளியிடப்பட்டது .

கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் கந்தர்வகோட்டை ஒன்றிய செயலாளரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா பேசும்பொழுது

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக செயல்படுத் தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வருகிறது. தமிழ்நாடு அறிவியல் இயக்க நாட்காட்டியில் ஒவ்வொ ரு மாதமும் அறிவியல் அறிஞர்கள் பிறந்தநாள் அவர்களின் கண் டுபிடிப்பு அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து நாட்காட்டில் இடம்பெற்றிருக்கும்.

. மாணவர்களுக்கு அறிவியல் நாட்காட்டியை பார்க்கும் பொழுது அறிவியல் அறிஞர்களின் பிறந்த தினம், கண்டுபிடிப்புகள் குறித்து அறிந்து கொள்வதற்கான சிறப்பான வாய்ப்பை அறிவியல் நாட்காட்டி வழங்கி வருகிறது.

ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை பல்வேறு வகையான அறிவி யல் செய்திகள் இடம் பெற்றிருக்கும். மாணவர்கள் அறிவியல் நா ட்காட்டியை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அறிவியல் இயக்கம் வெளியிடும் துளிர் மாத இதழ்,சிறகு இதழ்க ளை தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்று பேசினார். இந்நிகழ்வில் வானவில் மன்ற கருத்தாளர் தெய்வீக செல்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவாக ஆங்கில ஆசிரியை சிந்தியா நன்றி கூறினார்.